# 32. வழிபாட்டின்மாட்சி.



*பண் - இந்தளம்.*

**க**ரியுரி போர்த்தவர் காதல னாய
விரிகதிர் வேலுடை யாயுனை வேண்டித்
திரிபவ ருலகினிற் றீதடை வாரோ
பரிவுடை யின்னருட் பாடடை யாதே. 1

**வா**னத்துய் வோரிறை யோனெனு மாண்பு
ஞானப்பொன் வேலுடை யாயுனை நாடி
யேனிற்கு மேசில ரிழிவடை வாரோ
தேனிற்கு மேலுயர் சேணடை யாதே. 2

**பொ**ய்யுரை சீத்தருள் புரிகுரு நாதா
தொய்யலில் வேலுடை யாயுனைத் தொழுவோர்
வையமு ளேகடி மடியடை வாரோ
மெய்யதி மேதக வீறடை யாதே. 3

**செ**றிசிறு கிங்கிணி சேர்சர ணாதூய்
அறிவுடை வேலுடை யாயுனை வாழ்த்தும்
பொறியுடை யோர்மறு புதையடை வாரோ
வறிதறு வாழ்வினை யேயடை யாதே. 4

**நு**ண்ணிடைச் சசிமகள் பதியெனு நுதலார்
கண்ணுடை வேலுடை யாயுனைக் கருதி
மண்ணிடைத் திரிபவர் மருளடை வாரோ
விண்ணிடை நிறுவொரு வீடடை யாதே. 5

**ச**கலச ராசர தாரக தேவா
இகலயில் வேலுடை யாயுனை யெண்ணிப்
புகலிலை யென்பவர் புலவடை வாரோ
நிகரறு பூரண நிலையடை யாதே. 6

**அ**றைமறை யாறங்க நெறியின ரேத்தும்
பொறையுடை வேலுடை யாயுனைப் போற்றும்
குறையில ரோகையில் குறைவடை வாரோ
நிறைவெனு மின்புறை நிலையடை யாதே. 7

**து**விதமி லாதவத் துவிதமெய்ஞ் ஞானச்
சவியுடை வேலுடை யாயுனைத் தாழ்ந்து
கவிகுயில் வோர்கலுழ் கறையடை வாரோ
விவிதமி லாவிப வம்மடை யாதே. 8

**தே**ட்டமொ டன்றறு வருக்குயர் தேற்ற
நீட்டிய வேலுடை யாயுனை நீங்கா
நாட்டமிக் குடையவர் நலிவடை வாரோ
ஆட்டுமுன் னோடிரண் டறவடை யாதே. 9

4. ***வறிது*** = *அறியாமை ;* ***நிகண்டுகள்*** *காண்க.*
8. ***விபவம்*** = *செல்வம் ;* ***பி - நிகண்டறிக.***

திருப்புகழ் நாவலன் றிருப்புக ழணிக்கு
விருப்புடை வேலுடை யாயுனை மறவாக்
கருத்துளர் பிறிதொரு கருப்புகு வாரோ
உருக்கிய வுடம்புட னுனையடை யாதே.

மன்மத வருடம் ஆவணி மாதம் 23ஆம் தேதி மந்தவாரம்.